# TAHDCO

## Tamil Nadu AdiDravidar Housing & Development Corporation Ltd



தாட்கோ மூலமாக தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிசியோதெரபி கிளினிக் அமைத்து தொழில் தொடங்க அரிய வாய்ப்பு





ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களின் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்த தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிசியோ தெரபி கிளினிக் அமைத்து தொழில் தொடங்கிட தாட்கோ இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

# தகுதிகள்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- **வயது வரம்பு:** 18 முதல் 40 வயது
- **கல்வித்தகுதி:** பட்டப்படிப்பில் தகுதி பெற்றிருக்க வேண்டும் (**பிசியோதெரபி பட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்),**
- **ஆண்டு வருமானம்:** ரூ. 3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்
- சொந்தமாக 500 லிருந்து 750 சதுர அடி கட்டிடம் வைத்திருப்போர் பிசியோதெரபி கிளினிக் தொடங்கலாம்
- இடம் இல்லாதோருக்கு பிசியோதெரபி கிளினிக் அமைப்பதற்கு வாடகை அடிப்படையில் இடங்கள் தேர்வு செய்து தரப்படும்.

# திட்ட மதிப்பீடு விவரங்கள்

**திட்டத் தொகை:** ரூ.6,00,000/-

**தாட்கோ மானியம்:** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு திட்டத்தொகையில் 35% அல்லது அதிகபட்சமாக ரூ.2,10,000/-வரை

**பயனாளியின் பங்கு தொகை:** 5%.

- மீதமுள்ள தொகையினை வங்கி கடனாக பெற்றுக் கொள்ளலாம்.



# தொழில் அமைப்பதற்கான சிறப்பு சலுகைகள்

- தொழில் தொடங்குவதற்கான தேவையான அனைத்து உபகரணங்களும் ஏற்பாடு செய்து தரப்படும்.
- தொழில் முனைவோர்கள் அல்லது அவர்களின் ஊழியர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப்படும்.
- உரிமையாளர் கட்டணம் (Franchise Fees) முற்றிலுமாக நீக்கப்படும்
- தொழில் தொடங்க திட்ட அறிக்கை தயாரிக்க இலவச ஆலோசனை வழங்கப்படும்
- இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர் www.tahdco.com என்ற இணையதள முகவரியில் புகைப்படம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தின் மூலம் மாதம் ரூ.20,000/- முதல் ரூ.30,000/- வரை இலாபம் பெறலாம்.

**Thiru. K.S.KANDASAMY,I.A.S**

Managing Director

Tamil Nadu Adi Dravidar Housing &

Development Corporation Limited (TAHDCO)

Website : www.tahdco.tn.gov.in & www.tahdco.com